Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.86/2022

| | | |
|---|---|---|
| | | Prosecution PW-1 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | காந்திமதி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**1 ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார் மற்றும் 2 ம் எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **05.07.2023**

**முதல் விசாரணை**

1) நான் கரூர் பாரதி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். என்னுடைய தோட்டம் புத்தாம்புதுார் கிராமம், வடுகபட்டி ஊரில் உள்ளது. தினமும் எனது இருசக்கர வாகனத்தில் தோட்டத்திற்கு சென்றுவிட்டு மாலை வீட்டிற்கு வருவது வழக்கம். 06.10.2021 ஆம் தேதியன்று நான் எனது தோட்டத்திற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக மாலை 06.50 மணியளவில் சுக்காலியூர்

s/d. K. Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

மேம்பாலம் அருகில் வந்துகொண்டிருந்தபோது எனக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் என் செயினை பிடித்து இழுத்தார்கள். எனக்கு பதட்டமானதால் நான் ஒருபக்கம் எனது செயினை பிடித்துக்கொண்டேன். அவர்கள் பாதி செயினுடன், தாலி, குண்டுமணியுடன் பிடுங்கி சென்றுவிட்டார்கள். நான் அவர்கள் இருவரையும் துரத்திப் பார்த்தேன். என்னால் பிடிக்க முடியவில்லை. ஆஜர் எதிரிகள்தான் என் கழுத்தில் இருந்த தாலி செயினை பிடுங்கி சென்றார்கள்.

2) நான் என் வீட்டிற்கு தகவல் சொன்னேன். பிறகு மறுநாள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ-1 ஆகும். பிறகு சுமார் ஒரு வருடம் கழித்து செயின் கிடைத்துவிட்டதாக போலிசார் சொன்னதன் பேரில் நான் காவல் நிலையம் சென்று என்னுடைய செயினை அடையாளம் காட்டினேன். காவல் நிலையத்தில் ஆஜர் எதிரிகள் இருந்தார்கள். செயின், தாலி, குண்டுமணி ஆகியவற்றை நீதிமன்றத்தில் மனுதாக்கல்செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவில் உள்ள நகைகள் என்னுடையதுதான். அந்த நகைகள்தான் நான் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுச் சென்ற நகைகள். போட்டோவில் உள்ள தாலி செயின், தாலி, குண்டுமணி ஆகியவை சா.பொ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

1) புகார் கொடுக்கும்போது நானும் என் கணவர் மற்றும் என் மகனும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். 07.10.2021 ஆம் தேதியன்று மதியம் 01.30 மணியளவில் புகார் கொடுத்தேன். இந்த புகாரை யார் எழுதினார்கள் என்றால் தாந்தோணிமலை போலிசார் எழுதிக்கொடுத்தார். புகார் கொடுக்கும்போது ஆஜர் எதிரிகள் இருந்தார்களா என்றால் இல்லை. போலிசார் புகார் எழுதிக்கொடுக்க அதை நான் படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன். புகாரில் சாட்சி கையெழுத்து யார் போட்டார்கள் என்றால் எனது வீட்டுக்காரரர் அல்லது மகன் போட்டிருப்பார். புகாரில் உள்ள விவரங்களைத்தான் நான் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். போலிசார் நான் புகார் கொடுத்த அன்று மட்டும்தான் விசாரித்தார்களா என்றால் என்னை இரண்டுமுறை போலிசார் விசாரித்தார்கள். இரண்டாவது முறை விசாரிக்கும்போது புகார் கொடுத்து ஒரு வருடம் கழித்துதான் என்னை விசாரித்தார்கள்.

s/d. K. Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

2) தேதி சரியாக ஞாபகமில்லை. ஆஜர் எதிரிகளில் யார் என் நகையை பிடுங்கினார்கள் யார் வண்டியை ஓட்டினார்கள் என்றால் சாட்சி புளூ கலர் சட்டை போட்டிருக்கும் நபர்(பேய் பாஸ்கர்) என்பவரை காட்டி அவர்தான் நகையை பிடுங்கினார் என்றும், பக்கத்தில் இருக்கும் நபர்(சபரிஹரன்)என்பவரை காட்டி அவர்தான் வண்டியை ஓட்டிச்சென்றார் என சொன்னார். காணாமல் போன நகையை வேறு விதத்தில் தொலைத்துவிட்டு என்னிடம் எதிரிகள் நகைகளை பிடுங்கிச் சென்றார்கள் என்று பொய் புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் புகாரை கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆஜர் எதிரிகள் யாரும் எந்த குற்றமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d. K. Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.86/2022

| | | |
|---|---|---|
| | | Prosecution PW-2 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | நாகராஜன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**1 ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார் மற்றும் 2 ம் எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **05.07.2023**

**முதல் விசாரணை**

நான் பாரதி நகர், கரூரில் குடியிருந்து வருகிறேன். நான் பைனான்ஸ் வைத்து தொழில் செய்து வருகிறேன். காந்திமதி என் மனைவி ஆவார். கடந்த 06.10.2021 ஆம் தேதியில் மாலை 06.30 மணிக்கு சுக்காலியூர் மேம்பாலத்தில் எனது மனைவி வந்துகொண்டிருந்தபோது என் மனைவியின் செயினை இரண்டு நபர்கள் அறுத்து சென்றுவிட்டார்கள் என என் மனைவி எனக்கு தகவல் சொன்னார்கள். பிறகு நாங்கள்

s/d. K. Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். என் மனைவியிடமிருந்து பறித்துச் சென்ற பாதி செயின் கிடைத்துவிட்டது. நீதிமன்றத்தில் வந்து மனுதாக்கல் செய்து நகைகளை இடைக்காலப் பராமறிப்பில் பெற்றுச்சென்றோம். போலிசார் இது சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. என் மனைவி தகவல் சொன்னதன் பேரில்தான் எனக்கு சம்பவம் குறித்து தெரியும். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 எனது மனைவி என்பதால் அவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d. K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.86/2022

| | | |
|---|---|---|
| | | Prosecution PW-3 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | பிரேம்குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**1 ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார் மற்றும் 2 ம் எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **05.07.2023**

**முதல் விசாரணை**

நான் பாரதி நகர், கரூரில் குடியிருந்து வருகிறேன். நான் சாப்ட்வேரில் வேலையில் உள்ளேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். கடந்த 06.10.2021 ஆம் தேதியில் மாலை 06.30 மணிக்கு சுக்காலியூர் மேம்பாலத்தில் எனது அம்மா வந்துகொண்டிருந்தபோது என் அம்மாவின் செயினை இரண்டு நபர்கள் அறுத்து சென்றுவிட்டார்கள் என என் அம்மா எனக்கு தகவல் சொன்னார்கள். பிறகு நாங்கள் காவல் நிலையம் சென்று புகார்

s/d. K. Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

கொடுத்தோம். என் அம்மாவிடமிருந்து பறித்துச் சென்ற பாதி செயின் கிடைத்துவிட்டது. நீதிமன்றத்தில் வந்து மனுதாக்கல் செய்து நகைகளை இடைக்காலப் பராமறிப்பில் பெற்றுச்சென்றோம். போலிசார் இது சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. என் அம்மா தகவல் சொன்னதன் பேரில்தான் எனக்கு சம்பவம் குறித்து தெரியும். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 எனது அம்மா என்பதால் அவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக போலிசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d. K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.86/2022

| | | |
|---|---|---|
| | | Prosecution PW-4 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | முருகேசன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**1 ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார் மற்றும் 2 ம் எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **05.07.2023**

**முதல் விசாரணை**

நான் பெரிய கோதுாரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 07.10.2021 ஆம் தேதி நான் எனது தோட்டத்தில் இருந்து வீட்டிற்கு செல்லும்வழியில் சுக்காலியூர் மேம்பாலம் அருகில் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும்

s/d. K. Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னடையது. அந்த பார்வை மகசர் அ.சா.ஆ-2 ஆகும். நானும் என் அண்ணன் பழனிச்சாமி என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் போலிசார் நகை திருடியதற்காக வரைபடம் வரைந்ததாக சொல்லி என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனக்கு தெரியுமா என்றால் அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். காந்திமதி எனக்கு அக்கா முறை ஆகும். அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கையெழுத்து காவல் நிலையத்தில் வைத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் எழுதிய பேப்பரில் நான் ஒரு கையெழுத்து போட்டேன். எழுதாத பேப்பரில் நான் கையெழுத்து செய்யவில்லை. போலிசார் போட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d. K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.